# பாரதிதாசன் பல்கலை.யில் என்எஸ்எஸ் திட்ட அலுவலர்களுக்கான பயிலரங்கு தொடக்கம்

● திருச்சி

தமிழக அரசு பள்ளி மற்றும் உயர் கல்வித் துறைகள் இணைந்து நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர் கல்வி வழிகாட்டுதலுக்கான மருத்துவம், பொறியியல், சட்டம் மற்றும் கலை, அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்களுக்கான 2 நாட்கள் நடைபெறும் பயிலரங்கு பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நேற்று தொடங்கியது.

பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் ம.செல்வம் பயிலரங்கை தொடங்கி வைத்து பேசியது:

கல்விப் பணி என்பது இறைபணியாகும். கல்விப் பணியாற்றுவதற்கு மொழி மற்றும் கணிதம் இரண்டும் மிகவும் முக்கியமானதாகும். இவை இரண்டுமே கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் மேலும் அறிவை பரவலாக்கம் செய்வதற்கும் முக்கியமான பங்காற்றுகின்றன என்றார்.

திருச்சி மாவட்ட ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் முதல்வர் வின்சென்ட் டி.பால், நான் முதல்வன் திட்டத்தின் முக்கிய அம்சங்கள், இத்திட்டம் ஆற்றல்சார்ந்த இளைய சமுதாயத்தை நிலை நாட்டுவதற்கும், உயர்கல்வியில் அனைவருக்குமான வாய்ப்பை உருவாக்குவதற்கும் எந்த வகையில் செயல்படுகிறது என்பது குறித்து விளக்கினார். நான் முதல்வன் திட்ட மேலாண்மைக் குழு அலுவலர் ச.சுசீலா, பயிலரங்கின் நோக்கம் குறித்து விளக்கமளித்தார். பாரதிதாசன் பல்கலைக்கழக நாட்டு நலப் பணித் திட்ட மையம் மற்றும் மகளிரியல் துறை இணைந்து பயிலரங்குக்கான ஏற்பாடுகளை செய்திருந்தன. மகளிரியல் துறைத் தலைவர் ந.முருகேஸ்வரி வரவேற்றார். பல்கலைக்கழக என்எஸ்எஸ் ஒருங்கிணைப்பாளர் அ.லட்சுமி பிரபா நன்றி கூறினார்.




↑ பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் என்எஸ்எஸ் திட்ட அலுவலர்களுக்கான பயிலரங்கை நேற்று தொடங்கி வைத்துப் பேசுகிறார் துணைவேந்தர் ம.செல்வம்.